# மில்கோ (பிறைவட்) லிமிட்டட்

## (பண்ணை விலங்கு, பண்ணை ஊக்குவிப்பு மற்றும் பால், முட்டை தொடர்பான கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சுடன் இணைக்கப்பட்டது)

மில்கோ என்பது "ஹைலண்ட்" வர்த்தக நாமத்துடன் நாடு முழுவதும் பாலை சேகரித்து, உற்பத்தி செய்து மற்றும் விநியோகம் செய்யும் ஒரு பரந்துபட்ட வலையமைப்பைக் கொண்டுள்ள உள்ளூர் பால் கைத்தொழில் துறையின் முன்னோடியாகும். கொழும்பு, திகன, அம்பேவல மற்றும் பொலன்னறுவையில் அமைந்துள்ள நான்கு பாலைப் பதனிடும் தொழிற்சாலைகள் அதற்குண்டு. சுறுசுறுப்புமிக்க மற்றும் தேர்ச்சியுள்ள நபர்களை எமது அணியில் சேர்ந்துகொள்ளுமாறு நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

## முகாமையாளர் - கொள்வனவு

**தகைமைகள்:**

- ஓர் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்திக் கைத்தொழில் ஸ்தாபனத்தில் கொள்வனவு துறையில் அல்லது கொள்வனவு மற்றும் களஞ்சியப்படுத்தல் ஆகிய இரண்டு துறைகளிலுமே முகாமைத்துவம் பண்ணுவதில் 10 வருட தகைமைக்குப் பிந்திய அனுபவத்துடன் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து வழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவம் ஒரு பாடமாக உள்ளடக்கப்பட்ட நிர்வாகம்/ முகாமைத்துவம்/ வர்த்தக இளமாணி துறையில் ஒரு விசேட பட்டதாரிப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

- ஓர் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்திக் கைத்தொழில் ஸ்தாபனத்தில் கொள்வனவு துறையில் அல்லது கொள்வனவு மற்றும் களஞ்சியப்படுத்தல் ஆகிய இரண்டு துறைகளிலுமே முகாமைத்துவம் பண்ணுவதில் 12 வருட தகைமைக்குப் பிந்திய அனுபவத்துடன் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து வழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவம் ஒரு பாடமாக உள்ளடக்கப்பட்ட நிர்வாகம்/ முகாமைத்துவம்/ வர்த்தக இளமாணி துறையில் ஒரு பட்டதாரிப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(நிர்வாகம்/ முகாமைத்துவத் துறையில் முதுமாணி பட்டதாரிப் பட்டம் அல்லது பட்டப்பின் படிப்பு பட்டதாரிப் பட்டத்தைப் பெற்றிருப்பது ஒரு மேலதிக தகைமையாகும்.)

(விண்ணப்பதாரர்கள், மிகச் சிறந்த நிர்வாக மற்றும் முகாமைத்துவ இயலுமைகள் மற்றும் தொடர்பாடல் திறன்களைப் பெற்றிருத்தல் வேண்டும். கணனி அறிவானது ஒரு வேண்டப்படும் தகைமையாகக் கருதப்படும்.)

**வயது:** 35 - 50 வருடங்கள்

**சம்பளம் மற்றும் அனுகூலங்கள்:**

சம்பளம், நிறுவனத்தின் சம்பள அளவுத் திட்டத்திற்கமைவானதாகும். மற்றும் அனுகூலங்கள் தரத்திற்கு (Grade) ஏற்புடையதாகும்.

விண்ணப்பதாரர்கள் தமது சுயவிபரக் கோவைகளை உறவினரல்லாத சிபாரிசு செய்யும் நடுவர்கள் இருவரின் பெயர் மற்றும் தொடர்பு கொள்ள முடியுமான தொலைபேசி இலக்கங்களுடன், இந்த அறிவித்தல் வெளியான 07 தினங்களுக்குள் கீழேயுள்ள அலுவலரிற்கு கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் "பதவியை" தயவு செய்து குறிப்பிடுங்கள்.

**முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்,**
**மில்கோ (பிறைவட்) லிமிட்டட்**
**மில்லேனியம் டவர்,**
**இல. 345-7/1, காலி வீதி,**
**கொழும்பு-03.**